**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.77/2025**

**PW6**

| | | |
|---|---|---|
| **Name** | : | கணேஷ் |
| **Father's Name** | : | ஏழுமலை |
| **Village** | : | இனாம்காரியாந்தல் |
| **Taluk/District** | : | திருவண்ணாமலை. |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.02.2026.
A1 to 5 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது இனாம்காரியாந்தல் கிராமத்தில் குடியிருந்து எலக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அவர்களை இதற்கு முன் பார்த்ததில்லை. கடந்த 2019 வருடம் நான் திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்திற்கு நான் விபத்து சம்மந்தமாக சென்றபோது போலிசார் என்னை கையெழுத்து போடச்சொன்னாகள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. 1வது எதிரி அண்ணாமலையின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.4**. என்னுடன் அண்ணாமலை என்பவர் கையொப்பம் செய்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 19.07.2019 அன்று பகல் 3.00 மணியளவில் நானும் எங்கள் ஊரைசேர்ந்த அண்ணாமலை என்பவரும் எங்கள் உறவினர் விபத்து சம்மந்தமாக திருவண்ணாமலை கிழக்கு காவல்

நிலையத்திற்கு சென்றபோது அங்கு ஆய்வாளர் ஆஜர் எதிரி அண்ணாமலையை விசாரணை செய்துகொண்டிருந்தார் என்றும், அதற்கு எங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார் என்றும், அப்போது ஆஜர் எதிரி அண்ணாமலை எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் , அதை ஆய்வாளர் பதிவு செய்துகொண்டார் என்றும், அதில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த அண்ணாமலை என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.